1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, முதுகுளத்தூர், அபிராமம் ஆகியவை இணைக்கப்பட்டு 13 சங்கங்கள் அந்தப் பகுதியில் செயல்படுகின்றன. இரண்டாவது கட்டமாக இந்த ஆண்டில் கடலாடி பகுதியில் மேற் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும், பல வழித் தடங்களை அமைக்கவும் அரசு முடிவு செய்திருக்கிறது. விரைவிலே அது செயல்படுத்தப்படும்.

Water from Neyyar D0m

*Q. No. 556 —THIRU J. JAMES : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether there was an agreement between the Government of Tamil Nadu and the Government of Kerala regarding the sharing of water in Neyyar Dam ;

(b) if so, how much was agreed to be given to Tamil Nadu ;

(c) whether Tamil Nadu is getting the quantity of water agreed upon ; and

(d) if not, what action has been taken by this Government to get the agreed waters for Tamil Nadu ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) மற்றும் (ஆ): நெய்யாறு நீர்ப்பாசன திட்டத்தின் 2 வது கட்டத்தின்கீழ் கேரளம் மற்றும் தமிழ்நாடு மாநில அரசுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்பாட்டிற்கிணங்க, கேரளா விற்கு வினாடிக்கு 450 கன அடி தண்ணீரும் தமிழ் நாட்டிற்கு வினாடிக்கு 150 கன அடி தண்ணீரும் வழங்குவதற்கேற்ப வடிவமைப்புக் கால்வாய் அமைந்திருத்தல் வேண்டும்.

(இ) மற்றும் (ஈ) : கன்னியாகுமரி கிளைக் கால்வாயின் தலைப்பில் ஒப்புக் கொள்ளப்பட்ட அளவு தண்ணீரை கேரள அரசு விடாதபடியால், தமிழ்நாட்டு நீர்ப்பாசன உரிமைகளை பாதுகாப்பதற்கு, நிர்ணயிக்கப்பட்ட அளவாகிய வினாடிக்கு 150 கன அடி தண்ணீரை வழங்குவதின் அவசியத்தை வலியுறுத் தும் பொருட்டு, இவ்வரசு இப்பொருள் குறித்து கேரள அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டுமென்று ஒப்பந்தம் இருப்பதாகக் கூறினார்கள். ஆனால் இப்பொழுது எந்த அளவிற்குக் கிடைக்கிறது ? ஆகவே, ஒப்பந்தப்படி கிடைக்காத காரணத்தால் தமிழ்நாட்டிலுள்ள விவசாயம் பாதிக்கப்படுகிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, இனிமேலாவது ஒப்பந்தப்படி தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய முழு அளவுத் தண்ணீரைப் பெறுவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, இவ்வாண்டு குறைந்த அளவிற்கு—அதாவது வினாடிக்கு 80 கன அடியிலிருந்து 100 கன அடி வரையில் விடப்பட்டு வருகிறது. 1974 ஆம் ஆண்டிலேயே இது குறித்து தமிழ்நாடு அரசிலிருந்து கேரள அரசுக்குத் தலைமைப் பொறியாளரின் மூலமாகத் தகவல் அனுப்பப்பட்டு, உடனடியாக 150 கன அடி தண்ணீரை ஒப்பந்தப்படி விட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், பாசன வசதி பாதிக்காத அளவிலே பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. இதன் மூலமாக சுமார் 5,800 ஏக்கர் வரையில் பாசன வசதி பெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காகத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நெய்யாறு அணையில் தேவையான தண்ணீர் இருந்தும் கூட, ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தைவிட குறைவாகக் கொடுப்பதற்கான காரணம் என்ன ? மேற்கொண்டும் குறையாமல் தண்ணீரைப் பெறுவதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை மீண்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இது இரு மாநிலங்களிடையே இருக்கின்ற பிரச்னை. அதற்காகத்தான் நான் ஏற்கனவே சொன்னேன், வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் விடப்பட வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக இப்பொழுது 80 கன அடியிலிருந்து 100 கன அடி வரையில் இந்த வாய்க்கால் வழியாக வந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு மூலமாக இப்படியிருக்கின்ற நிலைமைகளை எல்லாம் கேரள அரசுக்கு அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவர்களும் செய்வதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.